ஒருநாள் மதீனா நகர் தனிலே
ஓங்கும் மஸ்ஜிது நபவியிலே
ஒருநாள் மதீனா நகர் தனிலே
ஓங்கும் மஸ்ஜிது நபவியிலே
பெருமான் நபிகள் பகர்ந்தார்கள்
பெருமான் நபிகள் பகர்ந்தார்கள்
பண்புடன் தோழர்கள் மத்தியிலே
ஒருநாள் மதீனா நகர் தனிலே
ஓங்கும் மஸ்ஜிது நபவியிலே

உதய நிலவின் குளிராக
உலகில் தோன்றிய உம்மி நபி
உதய நிலவின் குளிராக
உலகில் தோன்றிய உம்மி நபி

நீதி மறையின் திரு உருவாய்
நிதமும் வாழ்ந்த தூதர் சொன்னார்
இறுதி நாள் நெருங்கி வருகிறது
இறைவன் அழைப்பும் தெரிகிறது
கருணை இறைவன் சொல் கேட்டு
கடமையை செய்ததில் குறையுள்ளதோ

ஒருநாள் மதீனா நகர் தனிலே
ஓங்கும் மஸ்ஜிது நபவியிலே

யாருக்கும் தவறுகள் செய்தேனோ
எவருக்கும் துன்பம் தந்தேனோ
யாருக்கும் தவறுகள் செய்தேனோ
எவருக்கும் துன்பம் தந்தேனோ

கூறுங்கள் அன்பு தோழர்களே
குறைகள் இருந்தால் கூறுங்கள்
எப்போதேனும் சிறு பிழைகள்
என் வாழ்வில் ஏதும் செய்தேனோ
தப்பாது இங்கே சொல்லிடுவீர்
தயங்காமல் அதனை ஏற்றிடுவேன்

ஒருநாள் மதீனா நகர் தனிலே
ஓங்கும் மஸ்ஜிது நபவியிலே

அது கேட்ட தோழர்கள் நெஞ்சங்கள்
அதிர்ந்தது அங்கமெல்லாம் நடுங்கியே
அது கேட்ட தோழர்கள் நெஞ்சங்கள்
அதிர்ந்தது அங்கமெல்லாம் நடுங்கியே

நீதி தவறாத நாயகமே
தாங்கள் நன்மையின்றி தீமை
செய்ததில்லை
அப்போது ஒருவர் எழுந்து நின்றார்
அவர் தான் உகாஷா எனும் தோழர்
ஒப்பில்லாத இறை தூதே
ஒரு குறை உமக்கு உண்டு என்றார்

சொன்னதும் ஸஹாபா பெருமக்கள்
சினத்தால் துடித்து எழுந்தார்கள்
சொன்னதும் ஸஹாபா பெருமக்கள்
சினத்தால் துடித்து எழுந்தார்கள்
அண்ணல் பெருமான் அமைதியுடன்
ஆத்திரம் வேண்டாம் அமர்க என்றார்

என்ன குறைகள்; இருந்தாலும்
இயம்புக அதனை நீக்கிடலாம்
திண்ணமாய் அல்லாஹ் அறிந்திடுவான்
தீமைகளின்றி காத்திடுவான்.

உத்தம நபியே இரஸூலே
ஒட்டகை மேல் தாங்கள் இருக்கையிலே
உத்தம நபியே இரஸூலே
ஒட்டகை மேல் தாங்கள் இருக்கையிலே
சித்த மகிழ்வோடு நான் பிடித்து
சீராய் மணலில் நடக்கையிலே
சாட்டையை சுழற்றி ஒட்டகையை
சட்டென தாங்கள் அடித்தீர்கள்
ஒட்டி நடந்த என் உடம்பில்

ஓரடி விழுந்தது அப்போது

அதற்கு பதிலாய் தங்களை நான்
அடித்திட அனுமதி வேண்டுகிறேன்
அதற்கு பதிலாய் தங்களை நான்
அடித்திட அனுமதி வேண்டுகிறேன்
எதிலும் நீதி தவறாத
இரஸூல் நபியதை ஏற்றார்கள்
உண்மை உரைத்தீர் என் தோழரே
உமது உள்ளம் சாந்தி பெற
என்னை அடியும் என்றார்கள்
இசைவாய் அங்கே நின்றார்கள்.

என்னை அடித்த சாட்டை இங்கே

இல்லே தங்களின் வீட்டில் உண்டு
என்னை அடித்த சாட்டை இங்கே
இல்லே தங்களின் வீட்டில் உண்டு
எண்ணம் நிறைவேற வேண்டுமதை
ஏந்தலே எடுத்து வர சொல்லுங்கள்
இனிய பிலாலே ஏகிடுவீர்
எடுத்து வாரும் சாட்டை தனை
கண்ணீரோடு பிலால் விரைந்தார்
கருணை நபியின் இல்லத்துக்கே

அங்கே அன்னை ஃபாதிமாவும்
ஆருயிர் மக்கள் ஹஸன் ஹுஸைனும்
அங்கே அன்னை ஃபாதிமாவும்
ஆருயிர் மக்கள் ஹஸன் ஹுஸைனும்

பாங்காய் மூவரும் வீட்டினிலே
பண்பின் உரைவிடமாய் இருந்தார்
பாச மிகுந்த அன்பர் பிலால்
பரிவுடன் ஃபாதிமா எதிர் நின்று
நேசம் தவழ்ந்திடும் சபைதனிலே
நடந்ததை நயமுடன் எடுத்துரைத்தார்

செய்தியை செவியில் கேட்டவுடன்
சிந்தையில் வேதனை பொங்கியது
செய்தியை செவியில் கேட்டவுடன்
சிந்தையில் வேதனை பொங்கியது
தூய என் தந்தை உடல் நலமில்லை
தண்டனை எப்படி தாங்கிடுவார்
ஏன்றே கூறி சாட்டை தனை

ஏடுத்து பிலாலிடம் தரும் போது
நன்றே சொல்லும் உகாஷாவிடம்
நானே அடியை ஏற்றிடுவேன்.

அருமை குழந்தைகள் ஹஸன்
ஹுஸைனும்
அழுது கண்ணீர் வடித்தார்கள்
அருமை குழந்தைகள் ஹஸன்
ஹுஸைனும்
அழுது கண்ணீர் வடித்தார்கள்
பெருமை நிறைந்த பாட்டனாருக்கு
பதிலாய் எங்களை அடிக்கட்டுமே
துயரம் மேலிட சாட்டைதனை
துரிதமுடன் பிலால் எடுத்து சென்றார்

பயமில்லாது உகாஷாவிடம்
பெருமான் நபிகள் கொடுத்தார்கள்

சாட்டையை கையில் வாங்கியதும்
சாந்த நபியிடம் அவர் சொன்னார்
சட்டையில்லாது நான் இருந்தேன்
செம்மலே தாங்கள் அடிக்கயிலே
கேட்டதும் ஹாத்தமுன் நபியவர்கள்
கனிவுடன் சட்டையை நீக்கியதும்
சாட்டையை தூக்கி எறிந்து வி;ட்டு
தாவியனைத்தார் ஆவலுடன்

நுபுவத்தொளிரும் நபி முதகில்
நினைத்தது போல முத்தமிட்டார்

நுபுவத்தொளிரும் நபி முதகில்
நினைத்தது போல முத்தமிட்டார்
உணர்ச்சி உள்ளம் குளிர்ந்திடவே
உவகையில் மீண்டும் முத்தமிட்டார்
சுற்றிலும் நின்ற ஸஹாபாக்கள்
சோபனம் கூறி வாழ்த்தினரே
மட்டிலடங்கா மகிழ்ச்சியிலே
மஸ்ஜிதுந்நபவி திளைத்ததுவே

நானிலம் கண்ட நபிநாதர்
நன்பர் உக்காஷா மனம் மகிழ
இனிய சொர்க்கம் உமக்குண்டு
என்றே கூறி துவா செய்தார்

ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்